**சுருக்கம்**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படை பணிநியமனம் – புவியியல் மற்றும் சுரங்கத்துறை – பணியில் இருக்கும்போது காலமான அரசு ஊழியர் திரு.பா.மோகனசுந்தரம் என்பவரின் மகன் திரு.மோ.அருண் என்பவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தொழில் (இ.1) துறை**

**அரசாணை (4டி) எண்.4** **நாள்: 04.09.2019**

**விகாரி – ஆவணி, 18**

**திருவள்ளுவர் ஆண்டு, 2050**

**படிக்கப்பட்டவை:**

1. புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.2685/பி.எம்.2/2016, நாள்.31.01.2017.
2. புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1056/பி.எம்.2/2018, நாள்.27.03.2019.

*****

**ஆணை:**

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்பதன் அடிப்படையில், இராமநாதபுரம் மாவட்ட புவியியல் மற்றும் சுரங்கத்துறை துணை இயக்குநர் அலுவலகத்தில் பதிவுரு எழுத்தராகப் பணியில் இருக்கும்போது 05.04.2014 அன்று காலமான திரு.பா.மோகனசுந்தரம் என்பவரின் மகன் திரு.மோ.அருண் என்பவருக்கு மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறை ஆணையின்படி கருணை அடிப்படையில், புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநரகத்தில் இளநிலை உதவியாளராகத் தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 02.02.2017 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மறைந்த அரசு ஊழியர் தகுதிகாண் பருவம் முடித்த பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது மகன் திரு.மோ.அருண் என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 20.03.2015 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 17.03.1991 என்றும், அரசு ஊழியர் இறந்த நாளில் தனியரின் வயது 23 என்றும், பணி நியமன நாளில் தனியரின் வயது 26 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவித்து மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் அரசுக்கு முன்மொழிவு அனுப்பியுள்ளார்.

2) அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018–ல் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணி வரன்முறை குறித்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

(த.பி.பா)

3) இந்நிலையில், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநரின் முன்மொழிவு உரிய அசல் ஆவணங்களுடன் அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.மோ.அருண் என்பவர் பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநரகத்தில் இளநிலை உதவியாளர் பதவியில் 02.02.2017 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை ஏதும் இருப்பின் அவற்றைப் பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4) இவ்வரசாணை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் 21.08.2019ஆம் நாளிட்ட அலுவல் சாரா எண்.13273/க்யூ–2/2019–1 மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் அலுவல் சாரா எண்.28669/ஜி.2/2019, நாள்.29.08.2019–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**நா. முருகானந்தம்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை,
கிண்டி, சென்னை–600 032.

மாநிலக் கணக்காயர், சென்னை – 600 018/600 035.

ஆணையர், கருவூல மற்றும் கணக்குத் துறை, சென்னை–600 015.

சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்(தெற்கு), நந்தனம், சென்னை–600 035.

நகல்
திரு.மோ.அருண், இளநிலை உதவியாளர்,
புவியியல் மற்றும் சுரங்கத்துறை, கிண்டி, சென்னை–600 032.
(வழி: இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, சென்னை–600 032)

தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, சென்னை–600 009.

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–600 009.

இருப்புக் கோப்பு / உதிரி.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

**பிரிவு அலுவலர்**

Endt. No.1056/PM2/2018, dated:19.09.2019.
Forwarded to Thiru.M.Arun, Junior Assistant
O/o the Directorate of Geology and Mining,
Copy to:
AG(A&E), Chennai-18,
PAO(South), Nandanam, Chennai-18
Accounts Officer, Geology and Mining,

Additional Director of Geology and Mining